ONE TWO ACADEMY

12 - ஆம் வகுப்பு

தமிழ்

இயல் - 2

மதிப்பெண்கள்:-50 **கால அளவு: 1.30 மணி நேரம்**

I சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். **10 x 1 = 10**

1. தமிழில் திணைப்பாகுபாடு _____ அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.

அ) பொருட்குறிப்பு ஆ) சொற் குறிப்பு

இ) தொடர்க்குறிப்பு ஈ) எழுத்துக்குறிப்பு

2. நரம்புகளுக்குள் வீணை மீட்டிக்கொண்டிருக்கிறது என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது

அ) சூரிய ஒளிக்கதிர் ஆ) மழை மேகங்கள்
இ) மழைத்துளிகள் ஈ) நீர்நிலைகள்

3. வெள்ளச் சமவெளிகள் அழியக் காரணம்

அ) பருவநிலை மாற்றம் ஆ) மணல் அள்ளுதல்
இ) பாறைகள் இல்லாமை ஈ) நிலத்தடிநீர் உறிஞ்சப்படுதல்

4. உலக நாடுகள் மாற்று ஆற்றலை நோக்கிச் சென்றால் மட்டுமே புவி வெப்ப மயமாதலைக்கட்டுப்படுத்த முடியும் - இத்தொடர் உணர்த்துவது

அ) கார்பன் அற்ற ஆற்றல் பயன்பாடே தேவையாகிறது

ஆ) பசுமைக்குடில் வாயுக்கள் அதிகமாகிறது

இ) காலநிலை மாறுபடுகிறது
ஈ) புவியின் இயக்கம் வேறுபடுகிறது

5. யார்? எது? ஆகிய வினாச்சொற்கள் பயனிலையாய் அமைந்து, உணர்த்தும் திணைகள் முறையே _____

அ) அஃறிணை, உயர்திணை ஆ) உயர்திணை, அஃறிணை
இ) விரவுத்திணை, அஃறிணை ஈ) விரவுத்திணை, உயர்திணை

6. "உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை என்மனார் அவரல பிறவே " - இந்நூற்பா இடம்பெற்ற இலக்கண நூல் _____

அ) நன்னூல் ஆ) அகத்தியம் இ) தொல்காப்பியம் ஈ) இலக்கண விளக்கம்

7. **பொய்யா வானம்** புதுப்பெயல் பொழிந்தென - தடித்த சொல்லின் இலக்கணக் குறிப்பு

அ) வினைத் தொகை ஆ) உரிச்சொல் தொடர்

இ) இடைச்சொல் தொடர் ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

8. சரியானதைத் தேர்க.

அ) நகரம் - அமைதியாயிருந்தது

ஆ) நீர்ச்சுவடுகள் - சுவரெங்கும் இருந்தன

இ) மரங்கள் - வேர்விட்டன

ஈ) பறவைகள் சங்கீதம் இசைக்கவில்லை

9. 'முதல்கல்' சிறுகதை இடம் பெற்ற தொகுப்பு

அ) ஆரம்பம் இப்படித்தான் ஆ) சிந்து டீச்சர்

இ) தஞ்சை சிறுகதைகள் ஈ) குருவி மறந்த கூடு

10. உலகப்புவி நாள்

அ) ஏப்ரல் 21 ஆ) ஏப்ரல் 22 இ) ஜூன் 21 ஈ) ஜூலை 22

II எவையேனும் எட்டு வினாக்களுக்கு விடை அளிக்கவும் **8 X 2 = 16**

11. உயர்திணைப் பன்மைப் பெயர்கள் பன்மை விகுதி பெற்றுவருமாறு இரண்டு தொடர்களை எழுதுக.

12. இனநிரை - பிரித்துப் புணர்ச்சி விதி எழுதுக.

13. 'நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது' - விளக்கம் தருக.

14. 'ஆளுக்கொரு மரம் வளர்ப்போம்' என்னும் முழக்கத் தொடர் வாயிலாக எவற்றை வலியுறுத்துவாய்?

15. **மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.**

தலை, தளை, தழை

16. மொழியின் சொற்றொடர் அமைப்பை விளங்கிக் கொள்வதற்கும் பயன்படுத்துவதற்கும் உதவுவன எவை?

17.கார்பன் அற்ற ஆற்றல்கள் யாவை?

18.புணர்ச்சி விதி தருக. - **புதுப்பெயல்**

19.மொழியின் பண்புகள் யாவை?

20.அய்யப்ப மாதவன் வெளியிட்டுள்ள கவிதை நூல்கள் யாவை?

III எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை அளிக்கவும் 2 X 4 = 8

21.வாடைக் காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?

22.மழைவெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக்கொள் ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

23.பேரிடர் மேலாண்மை ஆணையம் - விளக்கம் தருக

IV எவையேனும் ஒரு வினாவிற்கு விடை அளிக்கவும். 1 X 8 = 8

24.'நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து' என்னும் தலைப்பில் சுற்றுச்சூழல் ஆர்வலர் பசுமைதாசனாருடன் நீங்கள் நடத்திய கற்பனைக் கலந்துரையாடலைத் தொகுத்து எழுதுக .

25.நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் மழைக்கால வருணனையைச் சொல்லில் வடிக்க.

V எவையேனும் ஒரு வினாவிற்கு விடை அளிக்கவும். 1 X 8 = 8

26.பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்பு நலத்தை விவரிக்க .

27.புயல் தாக்கத்தினால் குடியிருப்புகளுக்கு அருகில் அறுந்துகிடக்கும் மின் இணைப்புகளைச் சரிசெய்யக் கோரி உங்கள் ஊர் மின்வாரியப் பொறியாளர்களுக்குக் கடிதம் எழுதுக.